செய்தி வெளியீடு எண்.33/2019 நாள்: 15.03.2019

**விழுப்புரம் விராட்டிக்குப்பம் சாலை செல்வா நகரில் பாராளுமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில், வாக்களித்தப்பின் VVPAT இயந்திரத்தில் வாக்களித்ததின் உறுதித்தன்மை வெளிப்படுத்தும் செயல்பாட்டினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறினார்.**

**பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு இமயம் கேஸ் சர்வீசில் விநியோகம் செய்யப்பட உள்ள சிலிண்டர்களில் தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஒட்டுவில்லையினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் ஒட்டி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.**

******

விழுப்புரம் விராட்டிக்குப்பம் சாலை செல்வா நகரில் உள்ள நியாயவிலைக்கடையில், வருகின்ற 18.04.2019 அன்று நடைபெற உள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்கள் வாக்களித்தப்பின், VVPAT இயந்திரத்தில் வாக்களித்ததின் உறுதித்தன்மை வெளிப்படுத்தும் செயல்பாட்டினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள், புதிய வாக்களர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இன்று (15.03.2019) விரிவாக விளக்கிக் கூறினார்.

முன்னதாக, விராட்டிக்குப்பம் சாலையில் உள்ள இமயம் கேஸ் சர்வீஸ் மூலம் விநியோகம் செய்யப்பட உள்ள சிலிண்டர்களில், பாராளுமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, பொதுமக்கள் அனைவரும் வாக்களிப்பதின் முக்கியத்துவம் குறித்து, தேர்தல் விழிப்புணர்வு ஒட்டுவில்லைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்களால் ஒட்டப்பட்டு, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.குமாரவேல், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.இராஜேந்திரன் உட்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.